***பிரசார் பாரதி***

***அகில இந்திய வானொலி - சென்னை - 4***

***03 10 2025 FRIDAY 6.45 AM***

***<u>மாநில செய்திகள்</u>***

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

- ***பருத்தி உற்பத்தியை அதிகரிக்க உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.***
- ***மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர்தர கல்வியை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.***
- ***இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் நடப்புக் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை குறித்த அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.***
- ***உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வகையில் அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.***
- ***உலக பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் மீராபாய் சானு வெள்ளிப் பதக்கம் வென்றார்.***

***--- இனி விரிவான செய்திகள் ---***

***<<<<<>>>>>>***

***பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.***

***இது தொடர்பாக மத்திய ஜவுளி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 11 மாநிலங்களில் சாதனை அளவில் 550 பருத்தி கொள்முதல் மையங்கள் செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.***

***இதற்கான செயலி மூலம் விவசாயிகளின் பதிவை அதிகரிக்க விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ளவும் மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.***

***ஒவ்வொரு மையத்திலும் கொள்முதல் நடவடிக்கைகளை மேற்பார்வையிட உள்ளூர் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.***

***<<<<<>>>>>>***

*மின்னணு மற்றும் தொழில்நுட்பத் துறையில் உயர்தர கல்வி வழங்கும் வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர், பீஹார், ஒடிசா, மிசோரம், டாமன் டையூ மற்றும் ஆந்திராவில் இதற்கான தேசிய கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.*

*அனைவருக்கும் உயர்தர டிஜிட்டல் கல்வி கிடைப்பதை இந்த நிறுவனங்கள் உறுதி செய்யம் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*

*<<<<<>>>>>>*

*இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் நடப்புக் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை குறித்த அறிவிப்பை மாநில அரசு வெளியிட்டுள்ளது.*

*கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் மத்திய அரசு மாநிலத்திற்கு வழங்க வேண்டிய நிதி விடுவிக்கப்பட்டதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இச்சட்டத்தின்கீழ் தகுதியான மாணவர்களை பதிவு செய்வதற்கான 10 நாள் கால அட்டவணையும் வெளியிடப்பட்டுள்ளது.*

*தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் EMIS இணையதளத்தில் இம்மாதம் 17ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<>>>>>>*

*கிராமப்புறங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்துவதன் மூலம் குற்றச் செயல்களை வெகுவாகக் குறைக்க முடியும் என்று மாநில வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.*

*ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி பகுதியில் காவல்துறை சார்பில் சி.சி.டி.வி. கேமரா பயன்பாட்டை அவர் தொடங்கி வைத்துப் பேசிய அவர், குற்றச் செயல்கள் நடைபெறாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியம் என்று கூறினார்.*

கிராமங்களின் நுழைவுப் பகுதிகள், முக்கிய சாலை சந்திப்புகள், மக்கள் வசிக்கும் பகுதிகள் என பல்வேறு பகுதிகளில் கேமராக்கள் பொருத்தும் பணி நிறைவடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வகையில் அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி, அரூர் பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் 17 மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் மற்றும் அரசு கலைக் கல்லூரிகள் தொடங்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

முதலமைச்சர் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களால் ஈர்க்கப்பட்டுள்ள முதலீடுகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>>

ஆர்.எஸ்.எஸ். நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு சென்னையில் பேரணி நடத்திய அந்த அமைப்பைச் சேர்ந்த 39 பேர் கைது செய்யப்பட்டது கடும் கண்டனத்திற்குரியது என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

குற்றங்களைத் தடுக்க தவறிய திமுக அரசு, பொதுமக்களுக்கு எந்தவொரு இடையூறுமின்றி அமைதியான முறையில் பேரணி நடத்தியவர்களை கைது செய்தது ஏன் என்றும் அவர் வினவியுள்ளார்.

அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>>

*சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களின் ஒருசில பகுதிகளில் இன்று லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்டங்களிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.*

<<<<<>>>>>>

*தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் அருள்மிகு முத்தாரம்மன் கோவிலில் சூரசம்ஹாரம் நிகழ்ச்சி வெகு விமரிசையாக நடைபெற்றது.*

*தசரா திருவிழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹார நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

<<<<<>>>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

*இஸ்தான்புல் அமைதி ஒப்பந்தத்தையடுத்து, ரஷ்யா - யுக்ரைன் நாடுகளிடையே தலா 185 போர்க் கைதிகளை பரிமாறிக் கொண்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

<<<<<>>>>>>

*ஈரான் ஏவுகணை, போர் விமான உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 12க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மீது அமெரிக்கா தடை விதித்துள்ளது.*

<<<<<>>>>>>

*மாஸ்கோவில் பயணம் மேற்கொண்டுள்ள வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிட்டா தேசப்பிதா மகாத்மாக காந்தியின் கொள்கைகள் குறித்து பள்ளி மாணவர்களிடையே உரையாற்றினார்.*

<<<<<>>>>>>

*ஜம்முவில் நடைபெற்ற தசரா கொண்டாட்டங்களில் மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் பங்கேற்றார்.*

<<<<<>>>>>>

*சத்தீஸ்கர் மாநிலம் பிஜப்பூர் மாவட்டத்தில் 103 மாவோயிஸ்ட்டுகள் பாதுகாப்புப் படையினரிடம் நேற்று சரணடைந்தனர்.*

<<<<<>>>>>>

*மேற்குவங்கத்தின் அலிப்பூர்துவார் பகுதியில் நில அதிர்வு உணரப்பட்டது. இது ரிக்டர் அளவில் 3 புள்ளி ஒன்றாக பதிவானது.*

<<<<<>>>>>>

*உலக நடைபயிற்சி விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு கன்னியாகுமரியில் நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்பு குறித்த பேரணியில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.*

<<<<<>>>>>>

*மயிலாடுதுறை மாவட்டம் சித்தமல்லி கிராமத்தில் உள்ள ஸ்ரீ பத்மாவதி சமேத திருவேங்கடநாத பெருமாள் கோயிலில் நேற்று சக்கரத்தாழ்வார் தீர்த்தவாரி மற்றும் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது.*

<<<<<>>>>>>

*மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நவராத்திரி பண்டியைகையை ஒட்டி அம்பு எய்தல் விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.*

<<<<<>>>>>>

*காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் ஆலயத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நாதஸ்வர கலைஞர்களின் இசையுடன் நேற்று தங்கரத ஊர்வலம் நடைபெற்றது.*

<<<<<>>>>>>

*கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் நேரிட்ட சாலை விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.*

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

***உலக பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் மீராபாய் சானு வெள்ளிப் பதக்கம் வென்றார்.***

***நார்வேயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.***

<<<<<>>>>>>

***உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.***

***புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் கிளப் த்ரோ பிரிவில் தரம்பீர் வெள்ளிப் பதக்கத்தையும், வட்டு எறிதல் பிரிவில் அதுல் கௌஷிக் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.***

<<<<<>>>>>>

***துருக்கியில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Madhurima Sawant - செர்பியாவின் Darja இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.***

***இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-3 என்ற செட் கணக்கில் அர்மேனியாவின் Alina - ரஷ்யாவின் Milana இணையை வென்றது.***

<<<<<>>>>>>

***டச் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தாரா ஷா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.***

***நெதர்லாந்திலர் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-19, 21-13 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் Clara Azurmendi-ஐ வென்றார்.***

<<<<<>>>>>>

***Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் - ஹரிஹரன் அம்சகருணன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.***

<<<<<>>>>>>

***வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் 2 விக்கெட் இழப்பிற்கு 121 ரன் எடுத்துள்ளது.***

***அகமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணி 162 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.***

*<<<<<>>>>>>*